# 2026ஆம் ஆண்டு முடிவடைந்தாலும்கூட தீர்வு கிடைப்பது சந்தேகமே என்பதை ஜனாதிபதி வெளிப்படுத்தியுள்ளார்!



## சுரேஷ் பிரேமச்சந்திரன் அறிக்கை

எதிர்வரும் 2026ஆம் ஆண்டின் பொதுத்தேர்தலில் பின்னரே புதிய அரசியல் யாப்பின் ஊடாக தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும், என்று

நேற்று ஜனாதிபதியின் தலைமையில் அவரது செயலகத்தில் வடக்கு - கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி தெரிவித்த கருத்துக்கள் குறித்து, தமது கட்சியின் நிலைப்பாட்டைத் தெரிவித்து ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் உத்தியோகபூர்வ பேச்சாளருமான சுரேஷ் க.பிரேமச்சந்திரன் ஊடக அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கையில், 21.12.2023 அன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் வடக்கு - கிழக்கு நல்லிணக்க செயற்பாடுகள் தொடர்பாகவும் அபிவிருத்தி தொடர்பாகவும் பேசுவதற்காக வடக்கு - கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்திருந்தார்.

2 ▶

மாலைக்கதிர்
Maalaikkathir
சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 04 வெள்ளிக்கிழமை 22.12.2023 கதிர் 142

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
PooAadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்

# யாழில் கைதான இந்திய மீனவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை

யாழ்ப்பாணம், நெடுந்தீவுக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான 13 இந்திய மீனவர்களுக்கும் 18 மாத சிறைத்தண்டனை விதித்த ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றம், அதனை 5 வருடங்களுக்கு ஒத்திவைத்துள்ளது.

கடந்த 6ஆம் திகதி நெடுந்தீவுக் கடற்பரப்பினுள் மூன்று படகுகளில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 13 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் மறுநாள், கடற்தொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள் ஊடாக ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட வேளை அவர்களை நேற்று வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டிருந்தது.

அந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது 13 மீனவர்களுக்கு எதிரான மூன்று குற்றச்சாட்டுக்களுக்கும் தலா 6 மாத சிறைத் தண்டனை விதித்த மன்று, அதனை

2 ▶

# சிறைச்சாலையில் உள்ளவர்களில் 53 வீத பேர் போதைப்பொருள் குற்றவாளிகள்

## கணக்காய்வு அறிக்கை தெரிவிப்பு




தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையின்படி, நாட்டிலுள்ள சிறைக் கைதிகளில் 53 சதவீதம் பேர் (2022) அதாவது 13,794 கைதிகள் போதைப்பொருள் குற்றங்களுக்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, கடந்த வருடம் 26,176 கைதிகள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இதில் போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பாக 4,406 கைதிகளும் ஏனைய 9,388 பேர் சந்தேக நபர்களாகவும் உள்ளனர்.

போதைப்பொருள் குற்றங்களுக்காக

2 ▶

# ஒன்றுபட்டுக் குரலுயர்த்தி உறவுகளை சிறை மீட்போம்

## யாழில் நாளை கலந்துரையாடல்

'ஒன்றுபட்டுக் குரலுயர்த்தி உறவுகளை சிறை மீட்போம்' என்ற தொனிப்பொருளில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை காலை 10 மணியளவில் யாழ்ப்பாணம், தந்தை செல்வா கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பில் 'குரலற்றவர்களின் குரல்' அமைப்பு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

"ஒரு மனிதநேய சிவில் செயற்பாட்டு அமைப்பு என்ற வகையில் 'குரலற்றவர்களின் குரல்' அமைப்பினராகிய நாம், எமது சக மனிதநேயப் பற்றாளர்களான மக்கள் நலன் சார்ந்த அனைத்துத் தரப்பினர்களினதும் மனமிசைந்த ஒத்துழைப்புடன், 28 ஆண்டு காலமாகத் தொடர் சிறை வைக்கப்பட்டுள்ள 14 தமிழ் அரசியல் கைதிகளினதும் மனிதாபிமான விடுதலையை வலியுறுத்திய செயற்கரும செய்தி ஒன்றை பொதுவெளியூடாக நாட்டின் ஜனாதிபதியிடம் கொண்டு சேர்க்கும் காலக் கடமையொன்றை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

எனவே, இந்தக் கருணைப் பணி குறித்த இலக்கை எய்துவதற்கு சமூக நேசங்கொண்ட அனைவரும் தமது உயர்ந்தபட்ச ஒத்துழைப்பைத் தந்துதவ வேண்டுமென அன்புரிமையுடன் திறந்த பொது வேண்டுகோளை விடுப்பது தொடர்பாகவும், அதனை

2 ▶

# ரெலிகொம் நிறுவன ஊழியர்கள் யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம்!

"ஶ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தை தனியார் மயமாக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அதன் ஊழியர்கள் யாழ்ப்பாணத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் உள்ள "ஶ்ரீலங்கா ரெலிகொம் அலுவலகத்திற்கு முன்பாக இன்று அவர்களது ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

நிறுவன பங்குகளை விற்பனை செய்வது தொடர்பான அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் அமுல்படுத்துகின்ற அரசுக்கு சொந்தமான நிறுவனங்களை தனியார் மயமாக்குதலுக்கு எதிராகவும் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், "இலாபம் ஈட்டும் தொலைத்தொடர்பு நிறுவனத்தை தனியார் மயமாக்குவதை நிறுத்து!, தேசிய வளங்களை விற்பதை நிறுத்து!, பொருளாதாரத்தை மேம்படுத்துவதாகக் கூறி நாட்டின் வளங்களை விற்பனை செய்வதற்கு இடமளிக்க முடியாது! - போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு அரசுக்கு எதிராக கோஷமிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். (01)

# போதைப்பொருள் கடத்திய பெண்ணுக்கு சொந்தமாக மூன்று மீன்பிடி படகுகள்

## பொலிஸாரின் வலையில் சிக்கினார்

மீனவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டு வந்த பெண் ஒருவர் 2 கிராம் 20 மில்லிகிராம் ஹெரோயினுடன் புஸ்ஸ ரத்ன உடகம பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாக ரத்கம பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் மற்றும் விசேட பொலிஸார் குழுவொன்று மேற்கொண்ட நடவடிக்கையின் போதே போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் இந்தப் பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரண்டு பிள்ளைகளின் தாயான 44 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். நீண்ட காலமாக போதைப்பொருள் வியாபாரத்தை மிக நுணுக்கமாக நடத்தி வந்துள்ள இவர் புஸ்ஸ, ரன்ன உடகம மற்றும் அதனை அண்டிய

2 ▶

# மதுபோதையில் கூத்தாடிய தபால் நிலைய அதிபர் கைது

மதுபோதையில் அநாகரீகமாக நடந்தவாறு அலுவலக அறையில் உறங்கிக் கொண்டிருந்த கெக்கிராவ தபால் அதிபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த தபால் அதிபர் மதுபோதையில் அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்களை திட்டியதால், அவர்கள் அலுவலகத்தை விட்டு வெளியேறி அலுவலகம் முன் காத்திருந்தனர்.

இதன்போது தபால் நிலையத்தில் சேவைகளை பெற வந்த மக்கள் சுமார் ஒரு மணி நேரம் காத்திருந்த நிலையில் மாற்று வழியின்றி கெக்கிராவ பொலிஸாருக்கு தகவல்

2 ▶

# திருமலை மாவட்ட செயலக திறன் அபிவிருத்தி தொழில் வழிகாட்டல் உப குழுக் கூட்டம்

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட செயலகத்தின் திறன் அபிவிருத்தி பிரிவின் தொழில் வழிகாட்டல் உப குழுவின் கூட்டமானது மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராய்ச்சி தலைமையில் கடந்த புதனன்று மாவட்ட செயலக உப ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டமானது மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ். அருள்ராஜ் அவர்களின் வழிகாட்டலில் மாவட்ட திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

2024 ஆம் ஆண்டுக்கான தொழில் வழிகாட்டல் தொடர்பான பொது செயற்றிட்டமொன்றை உருவாக்குவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இக்கூட்டத்தில் கிழக்கு மாகாண கல்வி திணைக்களத்தின் வழிகாட்டல் ஆலோசனைக்குரிய உதவி கல்வி பணிப்பாளர், திருகோணமலை மாவட்டத்தின் வலயக்கல்வி அலுவலகங்களின் தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர்கள், ஆலோசனை வழிகாட்டல் உத்தியோகத்தர்கள், மாவட்டத்தின் தொழில் பயிற்சி நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள், உயர்கல்வி நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலகத்தின் துறைசார் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## போதைப்பொருள் கடத்திய .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிகளுக்கு மொத்தமாக போதைப்பொருட்களை விநியோகித்துள்ளதாக பொலிஸார் மேற்கொண்ட ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இவரிடம் சொந்தமாக மூன்று மீன்பிடி படகுகள் இருப்பதாகவும் இவர் இவ்வளவு சொத்துக்களை எவ்வாறு சம்பாதித்தார் என்பது குறித்து சிறப்பு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், மேற்படி போதைப் பொருள் கடத்தல்காரரை நீதிமன்றில் ஆஜர்படுத்தி தடுப்புக் காவலில் வைக்க உத்தரவு பெற்று மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ரெதி-23)

## சிறைச்சாலையில் உள்ளவர்களில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறைவாசம் அனுபவிப்போரின் எண்ணிக்கை அதிகரிப்பதன் காரணமாகவே சிறைச்சாலைகளில் வழக்கத்திற்கு மாறான நெரிசல்நிலை தோன்றியிருப்பதாகவும், சிறைச்சாலையின் முக்கிய நோக்கத்தை அடைவதற்கும், சிறைச்சாலையின் உள்பாதுகாப்பு மற்றும் செயல்பாட்டிற்கும் இந்த நிலைமை தடையாக இருப்பதாகவும் கணக்காய்வு அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரெதி-21)

## யாழில் கைதான இந்திய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

5 வருடங்களுக்கு ஒத்திவைத்தது.

அதேவேளை, மூன்று படகுகள் தொடர்பான வழக்கு விசாரணைக்காக எதிர்வரும் மார்ச் மாதம் 11ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்த மன்று, அன்றைய தினம் படகின் உரிமையாளர்கள் மன்றில் முன்னிலையாக வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளது. (அ)

## ஒன்றுபட்டுக் குரலுயர்த்தி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எவ்வடிவத்தில் நடைமுறைச் சாத்தியப்படுத்துவது எனவும் அவசரமாகக் கலந்துரையாடவேண்டியுள்ளது.

ஆகவே, இந்த விடயம் தொடர்பாக நாளை நடைபெறும் கலந்துரையாடலில் அனைவரும் பங்கேற்று தமது ஒத்திசைவை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்" - என்றுள்ளது. (அ)

## மதுபோதையில் கூத்தாடிய ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கினர்.

அங்கு விரைந்து சென்ற பொலிஸார் தபால் அலுவலகத்தில் ஒய்யாரமாக நித்திரை செய்து கொண்டிருந்த தபால் அதிபரை கைது செய்தனர். இதனையடுத்து, தபால் அலுவலக நிலையத்தில் அலுவலக பணிகள் வழமை நிலைக்கு திரும்பின.

இச்சம்பவம் தொடர்பில் கெக்கிராவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ரெதி-22)

## இளைஞர் சமுதாயத்தை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதில் வடக்கு மாகாணத்திலிருந்து ஈபிடிபியைச் சார்ந்த திலீபன் என்ற உறுப்பினரைத் தவிர, வேறு யாரும் கலந்துகொள்ளவில்லை.

கிழக்கு மாகாணத்திலிருந்து திரு. சம்பந்தன், சாணக்கியன், கோவிந்தன் கருணாகரம் (ஜனா), மற்றும் கலையரசன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

ஆளும் தரப்பைச் சேர்ந்த அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தாவோ, வியாழேந்திரனோ, சந்திரகாந்தன் என்றழைக்கப்படும் பிள்ளையானோ இதில் கலந்துகொள்ளவில்லை.

வடக்கு-கிழக்கு அபிவிருத்தி பற்றிப் பேசுகின்றபொழுது வடக்கு - கிழக்கின் அமைச்சர்களாக இருப்பவர்களும் கலந்துகொள்வில்லை.

ஜனாதிபதி அவர்களின் ஏமாற்றுத்தனமான நடவடிக்கைகளை எண்ணியோ என்னவோ வடக்கு மாகாணத்திலிருந்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்ளவில்லை.

இத்தகைய சூழ்நிலையில்தான் வடக்கு - கிழக்கு அபிவிருத்தி தொடர்பாகவும் நல்லிணக்கம் தொடர்பாகவும் பேசப்பட்டதாக அறிகிறோம்.

நல்லாட்சி அரசாங்கத்தில் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபொழுது ஒரு புதிய அரசியல் சாசனத்தைத் தயாரிப்பதற்கான பல்வேறுபட்ட குழுக்கள் அமைக்கப்பட்டு வரைவுகளும் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், ரணிலுக்கும் ஜனாபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக அன்றைய புதிய அரசியல் சாசனத்திற்கான முயற்சிகள் முடக்கப்பட்டது.

இப்பொழுது ரணில் விக்கிரமசிங்க அவர்கள் ஜனாதிபதியாக வந்ததன் பின்னர், இனப்பிரச்சினைத் தீர்வின் மேல் அக்கறை உள்ள ஜனாதிபதியாகத் தன்னைக் காட்டிக்கொள்ள முயற்சி செய்கிறார். தமிழர் தரப்புகளை அழைத்து பேசினார். நாடாளுமன்றத்தில் பதின்மூன்றாவது திருத்தத்தை அமுல்படுத்துவதற்கு ஏனைய கட்சிகளை ஆதரவளிக்கும்படி கோரினார். அவர்களும் ஆதரவளிப்பதாக நாடாளுமன்றத்தில் தெரிவித்தனர்.

டெல்லிக்குச் சென்றபொழுதும் பதின்மூன்றை முழுமையாக நிறைவேற்றுவதாக இந்தியப் பிரதமருக்கு உறுதிமொழி அளித்தார். அவ்வப்பொழுது சர்வதேச அழுத்தங்கள் வருகின்றபொழுது இனப்பிரச்சினையைத் தீர்ப்பதாகக் கூறுவதை ஒரு வழக்கமாகக் கொண்டிருக்கின்றார்.

இந்த விதத்தில்தான் கடந்த 21ஆம் திகதி கூட்டமும் ஜனாதிபதியின் செயலகத்தில் நடைபெற்றது.

ஊடகங்களின் செய்திகளின்படி மயிலத்தமடு காணிப்பிரச்சினை, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டவர்களின் விடுதலை, கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகத்தை தரமுயர்த்துதல் போன்ற பல விடயங்கள் தொடர்பாக பேசப்பட்டதாகவும் அவற்றைச் செய்வதாக ஜனாதிபதி உறுதியளித்ததாகவும் கூறப்படுகின்றது.

இதில் கலந்துகொண்ட திரு. சம்பந்தன் அவர்கள் பேசுகின்றபொழுது, "வடக்கும் கிழக்கும் மீள இணைக்கப்பட வேண்டும் என்றும் இந்திய - இலங்கை ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டு பதின்மூன்றாவது திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப்படவேண்டும் என்றும் இல்லையேல் சர்வதேச உதவிளை நாடவேண்டியிருக்கும்" என்றும் கூறியதாக அறியமுடிகின்றது.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி அவர்கள், 2025இல் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தி ஒருவருட காலத்திற்குள் புதிய அரசியல் சாசனத்திற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும், என்று கூறியது மாத்திரமல்லாமல் தற்போது பதின்மூன்றாவது திருத்தத்தில் இருந்து பறிக்கப்பட்ட சில அதிகாரங்களை மீள வழங்குவதற்கு ஆலோசிக்கலாம் என்றும் கூறியுள்ளார்.

அதாவது ஒரு விடயத்தை அவர் மிகவும் தெளிவாக கூறுகிறார். 2026ஆம் ஆண்டு முடிவடைந்தாலும்கூட தீர்வு கிடைப்பது சந்தேகமே என்பதை அவர் வெளிப்படுத்தியிருக்கிறார்.

அரசியல்சாசனத்தில் இருக்கக்கூடிய பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு கால அவகாசங்களை கோருகின்ற ஒரு விடயத்தைத்தான் எம்மால் பார்க்க முடிகின்றது. அது மாத்திரமல்லாமல் ஜனாதிபதித் தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் எவ்வாறு வெற்றிகொள்வது அதற்குப் புலம்பெயர் தமிழர்களையும் வடக்கு - கிழக்குத் தமிழர்களையும் எவ்வாறு பயன்படுத்திக்கொள்வது போன்ற சிந்தனைகளில் ஜனாதிபதி ஈடுபடுகின்றாரே தவிர, இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது அவரது முன்னுரிமைப் பட்டியலில் கிடையவே கிடையாது என்பது வெளிப்படையாகவே தெரிகிறது.

இப்பொழுது புதிய இந்தியத் தூதுவர் இலங்கைக்கு வந்திருக்கின்றார். அவரை நாங்கள் இருகரம்கூப்பி வரவேற்கின்றோம். யுத்தம் முடிந்து பதினான்கு வருடங்கள் கடந்த பின்னரும்கூட, தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண சிங்கள அரசதரப்பினர் தயாராக இல்லை என்பதை புதிய இந்திய தூதுவர் தயவு செய்து புரிந்துகொள்ள வேண்டும். இலங்கை ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்குக் கொடுக்கும் உறுதிமொழிகளும் டெல்லிக்குக் கொடுக்கும் உறுதிமொழிகளும் அடுத்த கனமே காற்றில் பறக்கவிடப்படுகின்றது என்பதுதான் நிதர்சனமான உண்மை.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் சிங்கள அரசியல் தலைமைகளின் அசமந்தப் போக்கைச் சுட்டிக்காட்டக் கூடிய வகையில் தமிழ் மக்கள் ஒரு பொது வேட்பாளரை நிறுத்தி அவருக்கு வாக்களிக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும், என்று குறிப்பிட்டுள்ளார்.




விற்பனையாளர் தேவை

**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி - மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV
YouTube தளம்

# இடமாற்றம் பெறும் மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதவானுக்கு பிரியாவிடை நிகழ்வு



(கே.எ.ஹமீட்)

மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதவான் ஏ. பீற்றர் போல், இடம் மாற்றம் பெற்று செல்லவுள்ளமையினால் - அவரின் சேவையைப் பாராட்டி, அவருடைய பதவிக் காலத்தின் போது பணியாற்றிய - மட்டக்களப்பு மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரிகளினால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரியாவிடை நிகழ்வு கடந்த செவ்வாயன்று நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்றது.

இதன்போது நீதிபதியை மட்டக்களப்பு மாவட்ட மரண விசாரணை அதிகாரிகளின் இணைப்பாளர் எம்.எஸ். எம். நஸீர், மாவட்ட மரண விசாரணை அதிகாரிகள் சார்பாக பொன்னாடை போர்த்தி, நினைவுச்சின்னம் வழங்கி கௌரவித்தார்.

குறித்த பிரியாவிடை நிகழ்வில் நீதிவான் நீதி மன்ற பதிவாளர் திருமதி ரி. பிரியதர்ஷினி மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரிகளான எம்.எஸ்.எம். நஸீர், வி. ரமேஷ் ஆனந்தன், எஸ் .ராசகுமார், ரி. தவகுமார், எஸ். ஜீவரெத்தினம், வி. மணிமாறன், வி.ஆர். மகேந்திரன். ஏ.எல். புஹாரிதீன், எம்.எம். அகமட் சின்ன லெப்பை மற்றும் கே. பவளகேசன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

அங்கு உரையாற்றிய நீதிபதி பீட்டர் போல், நான் கடமையாற்றிய காலகட்டத்தில் எனது கடமைப்பிரிவில் மரண விசாரணை அதிகாரிகளாக கடமையாற்றிய அனைவரும் சிறப்பாகவே தங்கள் பணிகளை மேற் கொண்டிருந்தீர்கள், அவ்வாறே தொடர்ந்தும் உங்கள் பணி அமையவேண்டும், எனக் கேட்டுக்கொண்டார்.

# களுவாஞ்சிகுடி பிரதேச செயலகத்தில் வருடாந்த ஒளி விழா நிகழ்வு





(வி.ரி.சகாதேவராஜா)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக வருடாந்த ஒளி விழா நிகழ்வானது பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் நேற்று (21) வியாழக்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

அதிதிகளினால் மங்கல விளக்கேற்றப்பட்டதனை தொடர்ந்து அருட்தந்தை ஜீ. அம்றோஸ் (புனித பிரான்சிஸ் அசிசீயார் தேவாலயம்,குருக்கள்மடம்), அருட்திரு அ. நிரஞ்சன் (ஒளியேற்றும் உலக பணிச்சபை) ஆகியோரின் ஆசிச்செய்தியுடன் நிகழ்வுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

பெரியகல்லாறு தூய அருளானந்தர் தேவாலய மாணவர்கள் மற்றும் தேற்றாத்தீவு புனித யூதா ததேயு தேவாலய மாணவர்களினால் கரோல் கீதம், நாடகம், நடனம் போன்ற பல கலைநிகழ்வுகள் ஆற்றுகை செய்யப்பட்டதுடன், பிரதேச செயலக உத்தியோகத்தர்களினால் பாடல்களும் இசைக்கப்பட்டது.

இதன் போது நத்தார் தாத்தா வருகையுடன், நிகழ்வுகளை ஆற்றுகை செய்த மாணவர்கள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கான பரிசில்களும் வழங்கிவைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன், நிருவாக உத்தியோகத்தர் வே. தவேந்திரன், அலுவலக பதவிநிலை உத்தியோகத்தர்கள் உட்பட அலுவலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்

# சாய்ந்தமருதில் சமுர்த்தி பயனாளிகளுக்கு சௌபாக்கியா வீடுகள் கையளிப்பு



(எம்.எம்.றம்ஸீன்)

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான சௌபாக்கியா வீடமைப்பு திட்டத்தின் கீழ் சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி வங்கிச் சங்க சமூக அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் சாய்ந்தமருது - 12, 17 ஆம் பிரிவுக்குட்பட்ட 2 பயனாளிகளுக்கான வீடுகள் கையளிக்கின்ற நிகழ்வும் , 2 பயனாளிகளுக்கு தனவந்தர் மூலமாக இலவச குடிநீர் விநியோகமும் கடந்த புதன்கிழமை இடம்பெற்றன.

சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல்.ஜஃபரின் நெறிப்படுத்தலிலும், சமுர்த்தி தலைமைப் பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.சீ.ஏ. நஜீமின் தலைமையிலும் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக்,

அதிதிகளாக உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ.முவஃபிகா, சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் றியாத் ஏ மஜீத், சமுர்த்தி வங்கி முகாமையாளர் ஐ.எல்.ஹிதாயா, கருத்திட்ட முகாமையாளர் எஸ்.றிபாயா, பிரிவுக்கான கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம மட்ட சமுர்த்தி அமைப்புக்களின் தலைவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.



# செக் குடியரசுப் பல்கலைக்கழகத்தில் துப்பாக்கிச் சூடு 15 பேர் உயிரிழந்ததாக காவல்துறை தகவல் தெரிவிப்பு



செக் குடியரசிலுள்ள பல்கலைக்கழகமொன்றில் மாணவர் நடத்திய சரமாரி துப்பாக்கிச்சூட்டில் 15 பேர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

தலைநகர் ப்ராகிலுள்ள சார்ல்ஸ் பல்கலைக்கழகத்தில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இது குறித்து காவல்துறை அதிகாரியொருவர் தகவல் வழங்குகையில், சார்ல்ஸ் பல்கலைக்கழகத்தின் கலைக் கல்லூரியில் இருந்தவர்களை நோக்கி ஓர் இளைஞர் வியாழக்கிழமை சரமாரியாக துப்பாக்கியால் சுட்டார். இதில் 15 க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். ஏராளமானவர்கள் காயமடைந்தனர், என்று குறிப்பிட்டார்.

துப்பாக்கிச்சூடு குறித்த தகவலறிந்ததும் பொலிஸார் அந்தப் பகுதியை சுற்றிவளைத்து தேடுதல் வேட்டை மேற்கொண்டனர். இதில், துப்பாக்கிச் சூடு நடத்தியவர் சுட்டுக்கொல்லப்பட்டார் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

தாக்குதல் நடத்தியவரின் பெயர் டேவிட் கோஸக் எனவும், அவர் அந்தப் பல்கலைக்கழகத்தின் மாணவர் எனவும் பின்னர் தெரியவந்தது.

இந்தத் துப்பாக்கிச் சூடு சம்பவத்துக்கு முன்னதாக டேவிட் கோஸக்கின் தந்தையின் சடலம் கண்டறியப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தத் தாக்குதலுக்கு பயங்கரவாதத்துடன் தொடர்பில்லை என்று அந்த நாட்டின் உள்துறை அமைச்சர் விட் ராகுசன் தெளிவுபடுத்தியுள்ளார்.

செக் குடியரசு வரலாற்றிலேயே இந்தத் துப்பாக்கிச்சூடுதான் மிக மோசமான தாக்குதல் சம்பவம் என்று கூறப்படுகிறது.

அந்த நாட்டில் துப்பாக்கி வன்முறைகள் மிகவும் அரிது என்றாலும், கடந்த சில ஆண்டுகளாக இதுபோன்ற தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன என்று சுட்டிக்காட்டப்படுகிறது. (04)

# அலட்சியம் காரணமாக மரணத்தை விளைவித்தால் மருத்துவர்களுக்கு 2 ஆண்டுகள் சிறைத்தண்டனை

அலட்சியத்துடன் சிகிச்சை அளித்ததன் காரணமாக நோயாளி உயிரிழக்க நேரிட்டால் சிகிச்சை அளித்த மருத்துவருக்கு 2 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்கிறது இந்தியாவின் புதிய குற்றவியல் சட்டம்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இருந்து அமலில் இருக்கும் மூன்று குற்றவியல் சட்டங்களுக்கு மாற்றாக மூன்று புதிய குற்றவியல் சட்டங்களைக் கொண்டு வர இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

அதன்படி, பாரதிய நியாய சன்ஹிதா, பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா, பாரதிய சாக்ஷியா ஆகிய மூன்று திருத்தப்பட்ட சட்ட மசோதாக்கள் கடந்த புதன் கிழமை மக்களவையில் நிறைவேற்றப்பட்டன.

இந்த மசோதாக்கள் குறித்து விளக்கம் அளித்துப் பேசிய உள்துறை அமைச்சர் அமித் ஷா, பாரதிய நியாய (இரண்டாம்) சன்ஹிதா மசோதா, மருத்துவ அலட்சியத்தால் உயிரிழப்புகள் நேரும்போது அதை அப்படியே ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்குக் காரணமாக இருந்த மருத்துவருக்கு அதிகபட்சம் 2 ஆண்டுகள் வரை சிறை தண்டனையும், அபராதமும் விதிக்க வகை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

கவனக்குறைவான சிகிச்சை காரணமாக உயிரிழப்பு நேர்ந்தால் மருத்துவர்களுக்கு 2 ஆண்டுகள் சிறை தண்டனை விதிப்பதில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று இந்திய மருத்துவக் கவுன்சில் கோரிக்கை விடுத்திருப்பதாகத் தெரிவித்த அமித் ஷா, இதைக் கருத்தில் கொண்டு இந்த சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படும் எனக் கூறினார். அதேநேரத்தில், இந்த மசோதா தொடர்பாக நேற்று (வியாழக்கிழமை) மாநிலங்களவையில் பேசிய அமித் ஷா, மருத்துவர்களுக்கு விலக்கு அளிப்பது குறித்து எதுவும் தெரிவிக்கவில்லை.

இதில் உள்ள பிரிவு 106(1) இன்படி, வேண்டுமென்றே நிகழ்த்தப்படும் கொலையைப் போல் அல்லாமல், கவனக் குறைவான செயல்பாடு காரணமாக உயிரிழப்பு ஏற்படக் காரணமாக இருப்பவர்களுக்கு 5 ஆண்டுகள் வரை சிறை தண்டனையும், அபராதமும் விதிக்கப்படும்.

அதேபோல், பதிவு செய்யப்பட்ட மருத்துவர் அலட்சியமாக சிகிச்சை அளித்து அதன் காரணமாக உயிரிழப்பு நேருமானால் அவருக்கு அதிகபட்சம் 2 ஆண்டுகள் சிறை தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும்.

கவனக்குறைவான செயல்பாடுகளால் மரணத்தை விளைவிப்பவர்களுக்கு இந்திய குற்றவியல் சட்டம் 304ஏ, 1860 இன்படி அதிகபட்சம் 2 ஆண்டுகள் சிறையும், அபராதமும் விதிக்கப்படும். புதிய சட்டத்தில், இது 5 ஆண்டுகளாக அதிகரிக்கப்பட்டுள்ளது. (04)

# சீனாவை பாதித்த நிலநடுக்கம் எப்பகுதியில் ஏற்படுமென்பதை கணிக்க முடியவில்லை

## சீன விஞ்ஞானிகள் தெரிவிப்பு

கடந்த திங்கட்கிழமை சீனாவில் நிலநடுக்கம் ஏற்படுவதற்கு 3 நாள்களுக்கு முன்னதாகவே அச்சுறுத்தும் சமிக்ஞைகள் தமக்குக் கிடைக்கப் பெற்றதாக சீன விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால், ஏற்படப்போகும் நிலநடுக்கம் சீனாவில் எந்த இடத்தைத் தாக்கப் போகிறது என்பதில் பெரும் குழப்பமடைந்ததாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலநடுக்கத்தில் 131 பேர் இறந்துள்ளனர். 700க்கும் அதிகமான மக்கள் காயப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒன்பது ஆண்டுகளில் ஏற்பட்ட பயங்கரமான நிலநடுக்கமாகக் கருதப்படும் இது, சீனாவில் கான்சு மற்றும் கின்காய் ஆகிய பகுதிகளைத் தாக்கியது.

பொதுவாகவே ஏற்படப்போகும் நிலநடுக்கங்களை முன்கூட்டிய கண்டுபிடிப்பதென்பது முடியாத காரியமாகவே கருதப்பட்டு வந்த நிலையில் சீன விஞ்ஞானிகள் அந்தப் பணியில் சிறந்தவர்களாக விளங்கினார்கள்.

சீனாவின் ஷான்க்ஷி மாகாணத்தில் உள்ள ஆராய்ச்சியாளர்கள் 7.0 ரிச்டர் அல்லது அதற்கு அதிகமான அளவிலான நிலநடுக்கங்களை அவை வருவதற்கு முன்னரே தங்களால் கண்டுபிடிக்க முடியும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும், அவ்வளவு பெரிய நிலநடுக்கங்கள் எந்தப் பகுதியைத் தாக்கப்போகின்றன எனக் கண்டுபிடிப்பது சிரமமான விசயம் எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

புவியீர்ப்பு புலத்தின் அதிர்வெண்களில் ஏற்படும் சீரற்ற மாற்றத்தை கடந்த வெள்ளிக்கிழமையே கவனித்ததாகவும், நிலநடுக்கம் ஏற்படப்போவதை ஊகித்ததாகவும் சீன விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். ஆனால், சீனாவின் எல்லைக்குள் அது நடக்கப்போவதை ஊகிக்க முடியவில்லை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (04)

# கடுமையான சித்தாந்த நிலைப்பாடுகள் தேவையில்லையென போப் அறிவுறுத்தல்



போப் பிரான்சிஸ் நேற்று வத்திகானில் நடந்த நிகழ்வில் கிறிஸ்துமஸ் வாழ்த்துச் செய்தியைப் பகிர்ந்து கொண்டார்.

அப்போது அவர், கடுமையான சித்தாந்த நிலைப்பாடுகளை கைவிட வேண்டும் என்றும், அவை இன்றைய யதார்த்தங்களை புரிந்து கொள்வதில் இருந்து தடுத்து விடும் என்றும் வத்திகான் நிர்வாகத்தினருக்கு எச்சரிக்கை விடுத்தார்.

இதுதொடர்பாக மேலும் அவர் கூறுகையில், நல்ல நோக்கங்கள் என்ற போர்வையில் அடிக்கடி நம்மை யதார்த்தத்திலிருந்து பிரித்து முன்னேற விடாமல் தடுக்கும் கடுமையான சித்தாந்த நிலைப்பாடுகளுக்கு எதிராக விழிப்புடன் இருப்போம், என கேட்டுக்கொண்டார்.

போப் பிரான்சிஸ் நடத்திய இந்த நிகழ்வில் ரோமை மையமாக கொண்டு செயல்பட்டு வரும் கர்தினால்கள் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தன்பாலின திருமணத்தை ஏற்றுக்கொண்டு அதை ஆசீர்வதிக்க போப் பிரான்சிஸ் சமீபத்தில் அனுமதி அளித்திருந்தார். அதன் தொடர்ச்சியாக இன்றைய யதார்த்தத்தின்படி செயல்படுமாறு நிர்வாகத்தை அவர் கேட்டுக்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (04)

# 'கொக்கெய்ன்' போதைப் பொருளை சட்டபூர்வமாக்கும் சுவிட்சலாந்து?



'கொக்கெய்ன்' போதைப் பொருளை சுவிட்சலாந்தின் தலைநகர் பேர்னில் சட்டபூர்வமாக அனுமதிப்பது குறித்து உலகிலேயே முதல்முறையாக அந்த நாட்டு அரசு பரிசீலிக்கிறது.

அந்த நகரில் கொக்கெய்ன் போதைப் பொருள் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பலன் அளிப்பதில்லை.

கடுமையான சட்டதிட்டங்களுக்கு இடையிலும் போதைப் பொருள் விற்பனை கள்ளச்சந்தையில் அமோகமாக நடைபெறுகிறது.

எனவே, கொக்கெய்னை சட்டபூர்வ கேளிக்கைப் பயன்பாட்டு பொருளாக அங்கீகரித்தால் அதன் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தவும் சந்தையைக் கண்காணிக்கவும் முடியும் என்று நிபுணர்கள் கூறி வருகின்றனர்.

அதையடுத்து, சோதனை முறையில் கொக்கெய்னை சட்டபூர்வமாக்குவதற்கு நாடாளுமன்றம் ஆதரவு தெரிவித்துள்ளது.

எனினும், அதனை செயல்படுத்த பேர்ன் மாநகராட்சி ஒப்புதல் அளிக்க வேண்டும். அத்துடன், அரசியல் சாசனத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கூறப்படுகிறது. (04)

# தமிழகத்தின் மழை வெள்ளப் பாதிப்பை தேசியப் பேரிடராக அறிவிக்க இயலாது!

## இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன்

தமிழக வெள்ள பாதிப்பை தேசிய பேரிடராக அறிவிக்க முடியாது என்று இந்திய மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார். டெல்லியில் செய்தியாளர்களுக்கு தகவல் அளித்த அமைச்சர் நிர்மலா சீதாராமன், மழை பாதிப்புகளை குறைக்க தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை, என்று குற்றஞ்சாட்டினார்.

பொதுமக்களுக்கான 6,000 ரூபாய் நிவாரணத் தொகையை நேரடியாக வங்கிக் கணக்கில் செலுத்தாதது ஏன்? என்று கேள்வி எழுப்பிய அவர், தமிழக மழை வெள்ளப் பாதிப்பை தேசிய பேரிடராக அறிவிக்க இயலாது என்றும், அதனை மாநில பேரிடராக அறிவிக்க விரும்பினால் அதற்கான வழிமுறைகளை அதிகாரிகள் தெரிவிப்பார்கள், என்றும் குறிப்பிட்டார்.

மழை வெள்ளத்தால் மக்கள் பாதிக்கப்பட்டபோது தமிழக முதலமைச்சர் எங்கே இருந்தார்? என்று கேள்வி தொடுத்த அவர், பேரிடரின்போது டெல்லியில் இருந்து கொண்டு மத்திய அரசை குறை கூறுவது நியாயமா? என்றும் கேட்டிருந்தார். (04)

# இறக்காமம் அஷ்ரப் மத்திய கல்லூரியில் பிரதேசப்பதிவு புகைப்படக் கண்காட்சி





(வி.ரி.சகாதேவராஜா)

இறக்காமம் அஷ்ரப் மத்திய கல்லூரி ஏற்பாடு செய்திருந்த புகைப்படக் கண்காட்சி இன்று இடம்பெற்றது.

இறக்காமம் பிரதேசத்தை ஒட்டிய காட்சிகளாக 200 புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்த இப்புகைப்படக் கண்காட்சி கல்லூரியின் பிரதி அதிபர் ஏ.ஆர்.எம். அமீன் ஹிதாயா மீராலெவ்வை, இணை பாடத்திற்கு பொறுப்பான உதவி அதிபர் ஏ.எம்.எஸ். இர்பானா ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இக் கண்காட்சியில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாணத்தின் அழகியல் பிரிவுக்கு பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் சுந்தரம் ஸ்ரீதரன் கலந்து சிறப்பித்தார். கௌரவ அதிதியாக சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலகத்தின் அழகியல் பிரிவுக்குப் பொறுப்பான ஆசிரிய ஆலோசகர் எஸ்.எல். அப்துல் முனாப், மேலும் கல்லூரியின் ஆசிரியர்களான எஸ்.எல்.எம். குத்தூஸ் வி.ரி. ரிஸ்வானா எம்.ஐ. றிப்கா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# அட்டாளைச்சேனையில் கலை இலக்கிய விழா

(எம்.எப்.நவாஸ்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் அட்டாளைச்சேனைப் பிரதேச செயலகம் இணைந்து நடாத்தும் பிரதேச கலை இலக்கிய விழா அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹீஜா முஸாபீர் தலைமையில் செயலக கேட்போர் கூடத்தில் கடந்த புதனன்று இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக பிரதேச செயலாளர் எம் ஏ சி. அகமது ஷாபிர் அவர்களும் ஏனைய அதிதிகளாக கணக்காளர் எஸ் எல். றிபாஸ், உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஏ எல். மஜித், சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஏ எம். ஹமீட், முகாமையாளர் எஸ் எல். அஸீஸ், மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் ரீ எம். றின்ஸான், பிரதேச கலாசார உத்தியோகத்தர் திருமதி றஜாயா, எம் எஸ். ஜௌபர் மற்றும் கலைஞர்களான கவிஞர்



பாலமுனை பாறுக், ஈழமதி ஜப்பார், யு எல். மப்றூக், எம். வஹாப்தீன், எம் ஏ. ரமீஸ், எம். ஜலால்தீன் அதிபர் முஹாஜிரீன் மற்றும் கலைஞர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், பாடசாலை மாணவர் மாணவிகள், பெற்றோர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர். இதில் தெரிவு செய்யப்பட்ட கலை நிகழ்ச்சிகளும் மேடையற்றப்பட்டதுடன் மாவட்ட,பிரதேச மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பரிசீல்களும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

# தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு திருப்பழுகாமம் நூலகத்தில் பரிசளிப்பு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

2023 ஆம் ஆண்டுக்கான தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு மட்டக்களப்பு , பழுகாமம் பொது நூலக மண்டபத்தில் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா கடந்த வியாளன் (21)இடம் பெற்றது.

போரதீவுப்பற்று பிரதேச சபை மற்றும் பழுகாமம் பரம்பரை ஒன்றியத்தின் அனுசரனையுடனும் பழுகாமம் வாசகர் வட்டத்தின் ஒத்துழைப்புடனும் சிறந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.



# மகிந்தவைச் சந்தித்தமையால் மக்களுக்கு ஏற்பட்ட வலியை உணர்ந்து வருந்துவதாக கனடியத் தமிழர் பேரவை அறிக்கை

Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
“Voice of Tamil Canadians”

இமாலயப் பிரகடனத்தைக் கையளிப்பதற்காக மகிந்த ராஜபக்சவை சந்தித்தமையால் எமது மக்களுக்கு ஏற்பட்ட வலியை உணர்ந்து கனடியத் தமிழர் பேரவை ஆழமாக வருந்துவதாக அவ்வமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கனடியத் தமிழர் பேரவை இமாலயப் பிரகடனத்தைக் கையளிப்பதற்காக மகிந்த ராஜபக்சவை சந்தித்தமையால் எமது மக்களுக்கு ஏற்பட்ட வலியை உணர்ந்து ஆழமாக வருந்துகிறது.

இந்த ஆண்டு 2023 ஏப்ரலில் உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதிகள் மற்றும் இலங்கையில் உள்ள பல்வேறு பௌத்த உயர் மதபீடங்களின் மூத்த பௌத்த பிக்குகள் நேபாளத்தின் நாகர்கோட்டில் உரையாடல்களை மேற்கொண்டு இமாலயப் பிரகடனத்தை உருவாக்கினார்கள்.

இந்த நடவடிக்கையின் அடுத்த கட்டமாக, இரு தரப்பினரையும் உள்ளடக்கிய தூதுக்குழு இலங்கையில் பல்வேறு சந்திப்புகளை நடத்தியது.

அமெரிக்கா, இங்கிலாந்து, சுவிஸ் மற்றும் கனடா நாட்டு இராஜதந்திரிகள் உட்பட இலங்கையின் முக்கியமான அனைத்து மதத் தலைவர்கள், சிவில் சமூகத் தலைவர்கள், இலங்கை ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர், பெரும்பாலான தேசிய அரசியல் கட்சிகளின் தலைவர்கள், ஈழத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முக்கிய அரசியல் கட்சித் தலைவர்கள், முன்னாள் ஜனாதிபதிகள், முன்னாள், இன்னாள் சபாநாயகர்கள், அனைத்து அரசியல் கட்சிகளையும் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் என அனைவரையும் தூதுக்குழுவினர் சந்தித்து உரையாடியிருந்தார்கள்.

இமாலயப் பிரகடனத்தைக் கையளித்து, தேசிய உரையாடலை ஆரம்பிக்க நாடு முழுவதும் உள்ள மக்களிடம் இந்த முன்னெடுப்பு எடுத்துச் செல்லப்படும் என்பதைத் தெரிவிப்பதே இந்தச் சந்திப்புகளின் பிரதான நோக்கமாகும். இமாலயப் பிரகடனத்தைப் பெற்றுக் கொண்ட அனைவரும் இந்த முன்னெடுப்புக்குத் தமது முழு ஆதரவைத் தருவதாக கூறியதோடு மக்களால் தேர்வு செய்யப்பட்ட தமிழ்த் தலைவர்கள் தலைமையில் இலங்கையில் நிரந்தர சமாதானத்துக்கான அரசியல் முன்னெடுப்புகள் நடைபெறக்கூடிய சூழலை உருவாக்க இத் தேசிய உரையாடல் உபயோகமாக அமையுமெனவும் குறிப்பிட்டிருந்தார்கள்.

இமாலயப் பிரகடனத்தின் பன்மைத்துவ ஈடுபாட்டிற்கான ஆணையின் ஒரு பகுதியாக, தற்போதைய இலங்கை நாடாளுமன்றத்தில் அதிக உறுப்பினர்களைக் கொண்ட கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சாவையும் தூதுக்குழுவினர் சந்தித்திருந்தனர்.

இமாலயப் பிரகடனம் மற்றும் அர்த்தமுள்ள உரையாடலுக்கான முக்கியத்துவத்தைப் பற்றி இலங்கையில் செல்வாக்குள்ள அனைவருக்கும் தெரியப்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக மட்டுமே இந்தக் கூட்டம் இடம்பெற்றிருந்தது.

இந்தச் சந்திப்பு மற்றும் சந்திப்பின் படங்கள், புலம்பெயர் தமிழர்களிடமும், கனடியத்தமிழர்களிடமும் வேதனை தரும் வகையில் தீவிரமாக உணர்வுகளைத் தூண்டியுள்ளன என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம்.

கனடியத் தமிழர் பேரவை உண்மையிலேயே இது குறித்து ஆழமாக வருந்துகிறது. இவ்வாறான வேதனை உணர்வினை எமது மக்களுக்கு ஏற்படுத்துவதைக் கனடியத் தமிழர் பேரவை தனது நோக்கமாக கொண்டிருக்கவில்லை.

இமாலயப் பிரகடனத்தின் முதன்மையான நோக்கமும், அதைத் தொடர்ந்து நடைபெறும் அனைத்துச் சந்திப்புகளும், ஈழத்தமிழர்களுக்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய நிரந்தரத் தீர்வை அடைவதை நோக்கமாகக் கொண்ட ஒரு தேசிய உரையாடலை ஆரம்பிப்பதாகும்.

அத்துடன் தீவில் உள்ள அனைத்து முக்கிய பங்குதாரர்களையும் இந்த முயற்சியில் ஈடுபடுத்துவதாகும். நாங்கள் அரசியல் தீர்வுப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவில்லை. அவ்வாறான வேலைத்திட்டம் இலங்கையில் தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்த் தலைவர்களைச் சார்ந்த விடயமாகும்.

கனடிய தமிழர் பேரவை 2009 ஆம் ஆண்டு முதல் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் பங்கேற்பது உட்பட உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் போர்க் குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், அதற்கான பொறுப்புக்கூறல் மற்றும் ஈழத் தமிழ் மக்களின் நீதிக்காகக் கடுமையாக முன்னின்று உழைத்து வருகின்றது.

இலங்கையில், குறிப்பாகப் போரின் இறுதிக் கட்டங்களில், இலங்கையில் நடந்த மனித உரிமை அநியாயங்களுக்கு, பொறுப்புக்கூறல் மற்றும் நீதியை அடைவதற்கு உழைப்பது கனடியத் தமிழர் பேரவையின் முக்கிய பணிகளில் ஒன்றாகும். இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கும் இலங்கையில் நிலையான நீண்டகால சமாதானத்தை உருவாக்குவதற்கான செயல்முறைக்கும் ஆதரவளிக்கும் போது, கனடியத் தமிழர் பேரவையானது இலங்கைத் தமிழ் மக்களின் நலன்களுக்கான ஆணையை விட்டுக் கொடுக்காது, சமரசம் செய்யாது என்பதை உறுதிப்படுத்திக்கொள்கின்றோம்.

தூரதிர்ஷ்டவசமாக, இமாலயப் பிரகடனத்தின் உண்மையான நன்நோக்கம் குறித்துத் தவறான விளக்கங்கள் பரப்பப்பட்டுக் கனடியத் தமிழர் பேரவை அலுவலகர்கள், உறுப்பினர்கள், தொண்டர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கு எதிராகத் தேவையற்ற தாக்குதல்கள் நடந்துவருகின்றன.

நீண்டகாலமாக கனடியதமிழர் பேரவையின் பொறுப்புக்கூறல், நீதியை நிலைநாட்டுதல் மற்றும் சமாதானத்துக்கான பணியையும் முன்னேற்றத் தையும் இழிவுபடுத்தும் இத்தகைய செயல்களை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.






## கிளிநொச்சி வைத்தியசாலைக்கு உடல் குழாய் உற்று நோக்கல் இயந்திரம்

கிளிநொச்சி வைத்தியசாலைக்கு 6.6 கோடி பெறுமதியான உடல் குழாய் உற்று நோக்கல் இயந்திரம் (Olympus Endoscopy system) றோட்டரி கழகத்தினால் கையளிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு தெற்கு றோட்டரி கழகத்தின் ஏற்பாட்டில், அவுஸ்ரேலியன் மெடிக்கல் பவுண்டேசனின் நிதி பங்களிப்புடன் 6.6 கோடி பெறுமதியான குறித்த மருத்துவ பரிசோதனை இயந்திரம் வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வு இன்று காலை 11 மணியளவில் வைத்தியசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. அறிமுக நிகழ்வைத் தொடர்ந்து, குறித்த இயந்திரம் கையளிக்கப்பட்டது.

விருத்தினர்கள் வரவேற்கப்பட்டதை தொடர்ந்து, மங்கள விளக்கேற்றப்பட்டது. தொடர்ந்து 6.6 கோடி ரூபா பெறுமதியான குறித்த இயந்திரம் வைத்தியசாலையிடம் கையளிக்கப்பட்டது.

2017 ஆம் ஆண்டு முதல் குறித்த பரிசோதனை வசதி கிளிநொச்சி வைத்தியசாலைக்கு இல்லாமையால், நோயாளர்கள் சிரமங்களை எதிர் கொண்டதுடன், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டு வந்தனர்.

கிளிநொச்சி மாவட்ட மக்கள் மாத்திரமல்லாது மாங்குளம், வடமராட்சி கிழக்கு, புதுக்குடியிருப்பு, வடமராட்சி கிழக்கு, மூங்கிலாறு உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த மக்களும் இவ் வைத்தியசாலையில் சிகிச்சை பெற முடியாத நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில், குறித்த மருத்துவ பரிசோதனை இயந்திரத்தின் மூலம், சிகிச்சைக்காக வருகை தரும் நோயாளர்களிற்கான பரிசோதனைகள் தை மாதம் முதல் முன்னெடுக்கும் வகையில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் எஸ்.சுகந்தன் தெரிவித்தார்.

நிகழ்வில் றோட்டரி கழக உறுப்பினர்கள், வைத்தியர்கள், தாதியர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (02)

## கிரியுல்லவில் போதை விற்பனை பொலிஸாரால் சுற்றிவளைப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிரியுல்ல வியாபார மத்திய நிலையத்தின் மேல் மாடியில் மிகவும் இரகசியமான முறையில் மிக நீண்ட காலமாக நடத்திச் செல்லப்பட்ட போதைப் பொருள் விற்பனை நிலையம் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டது.

கிரியுல்ல பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் கிரியுல்ல பொலிஸார் மேற்கொண்ட திடீர் சுற்றி வளைப்பில் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதுடன் 10 கிராம் 700 மில்லி கிராம் ஹெரோயின், 5 கிராம் ஐஸ், 7 கிராம் ஹஸீஸ் மற்றும் செலுத்தும் ஊசிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் கிரியுல்ல நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

# JRIDE
BEYOND THE ROAD

# ONLINE TAXI APP FROM JAFFNA

ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.


## நாங்கள் தயாராகிவிட்டோம்!

**யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)**

உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.

இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!






இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்குங்கள்!

YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE

GET IT ON Google Play
Download on the App Store



**JRIDE TAXI SERVICE**
**SPEED IT NET**
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

+94 21 222 8358

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.12.2023இல் வெளியிடப்பெற்றது.